பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 08 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – ரஷ்யா இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசி மூலம் உரையாடினார்.
2. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
3. தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்களின் சேவைகளை அறிந்து கொள்வதற்கான கூட்டுறவு-செயலி-யை மாநில அமைச்சர் திரு கே ஆர் பெரியகருப்பன் இன்று தொடங்கி வைத்தார்.
4. தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. டுவெண்டி – டுவெண்டி மகளிர் உலகக்கோப்பைக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடினார்.

அப்போது இந்தியா – ரஷ்யா இடையேயான சிறப்புரிமை மிக்க இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

தாம் மேற்கொண்ட உக்ரைன் பயணம் குறித்து தெரிவித்த திரு நரேந்திமோடி, ரஷ்யா – உக்ரைன் இடையேயான போரின் தற்போதைய நிலை குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த போருக்கு விரைவில் அமைதியான தீர்வு கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும் என்று திரு நரேந்திரமோடி, ரஷ்ய அதிபரிடம் கூறினார்.

**[]<<<>>>[]**

மருத்துவர்களுக்கான சுகாதார பாதுகாப்பு, பணிச்சூழல் மற்றும் பாதுகாப்பு குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்காக உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட தேசிய அளவிலான பணிக்குழுவின் முதலாவது கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்.தில் பல்வேறு தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இன்றைய கூட்டத்தில் மத்திய அமைச்சரவை செயலர், சுகாதாரத்துறை செயலர், உள்துறை செயலர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மத்திய சுகாதாரத்துறையின் இணையதளத்தில் நாடு முழுவதிலுமிருந்து பல்வேறு தரப்பினர் தெரிவித்துள்ள கருத்துக்களை பரிசீலிக்குமாறு தேசிய பணிக்குழுவை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுவரை 400-க்கும் மேற்பட்ட ஆலோசனைகள் அளிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மருத்துவ துறை சார்ந்த அதிகாரிகள், காவல்துறை தலைவர்கள் உள்ளிட்டோர் நாளை நடைபெறும் கூட்டத்தில் காணொலி வாயிலாக கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை பதிவு செய்யவுள்ளனர்.

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிக்க

விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், ரமேஸ்வரத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களையும் சேர்த்து இதுவரை 116 இந்திய மீனவர்கள் இலங்கை சிறைகளில் உள்ளதாகவும், 184 மீன்பிடி படகுகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மீனவர்கள் தொடர்ச்சியாககைது செய்யப்படும் சம்பவங்கள் அவர்களின் குடும்பத்தினரிடையே மன உளைச்சலை ஏற்படுத்துவதோடு வாழ்வாதார பிரச்சினையையும் அவர்கள் எதிர்கொண்டு வருவதாக அவர். கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விரைவாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வெளியுறவுத்துறை அமைச்சரை திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

மத்திய அரசு ஊழியர்களுக்கு கொண்டு வரப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் பெரிதும் பலன்தரும் திட்டமாக உள்ளது என்று மதுரை ரயில்வே கோட்ட கூடுதல் மேலாளர் திரு நகேஸ்வர ராவ் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 25 ஆண்டுகள் பணி நிறைவு செய்த ஊழியர்கள் பணி நிறைவுக்கு முந்தைய 12 மாதங்களில் பெற்ற சராசரி அடிப்படை சம்பளத்தில் 50 சதவீதம் ஓய்வூதியம் பெறுவது உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்கள் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தில் உள்ளதாகக் கூறினார்.

ஓய்வூதியதாரர் இறக்கும்பட்சத்தில் அவர்கள் குடும்பத்தினருக்கு 60 சதவீத ஓய்வூதியம், பத்தாயிரம் ரூபாய் குறைந்தபட்ச ஓய்வூதியம், பணவீக்கத்திற்கு ஏற்ப ஓய்வூதிய நிர்ணயம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்கள் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தில் உள்ளதாக திரு நாகேஸ்வரராவ் தெரிவித்தார்.

மத்திய அரசு அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்று மதுரையைச் சேர்ந்த ரயில்வே ஊழியர்கள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - ரயில்வே ) -48--- செகண்ட்*

[]<<<>>>[]

கூட்டுறவு சங்கங்களின் சேவைகளை பொதுமக்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் கூட்டுறவு-செயலி தொடங்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு கே ஆர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று கூட்டுறவு செயலியை தொடங்கி வைத்து பேசிய அவர், இந்த செயலியில் கூட்டுறவு சங்கங்களால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் தொகுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த செயலி மூலம் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பல்வேறு வகையான கடன் திட்டங்கள் குறித்த தகவல்களை தெரிந்து கொள்ளலாம் என்றும், கடன் விண்ணப்பத்தினை இணைய வழியில் சமர்ப்பித்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகள், வேளாண் பொறியியல் எந்திரங்களை குறைந்த வாடகைக்கு எடுத்து பயன்படுத்தும் வகையில் இ-வாடகை என்ற பகுதி இந்த செயலியில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வங்கி சேவை பகுதியில் கூட்டுறவு வங்கியில் வழங்கப்படும் கடன் திட்டங்கள் மற்றும் அது தொடர்பான விவரங்கள அனைத்தும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கூட்டுறவு மருந்தகங்களிலிருந்து 20 சதவீத தள்ளுபடி விலையில் மருந்துகளைப் பெற்று பயன்பெறுவதற்கான பகுதியும் இந்த செயலியில் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் செயல்படும் அனைத்து நியாயவிலைக் கடைகள் குறித்த விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் திரு பெரியகருப்பன் கூறினார்.

**[]<<<>>>[]**

கல்வித்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த உள்ளதாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் இன்று கன்னியாகுமரி, தென்காசி, தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி முதல்வர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றிய அவர், மாணவர்கள் கல்லூரிக்குள்

நுழையும்போதே அவர்களை வேலைவாய்ப்புக்கு தயார்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

கல்லூரி மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப அவர்களுக்கான பயிற்சியை கல்லூரி நிர்வாகத்தினர் அளிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று திருமதி இன்னசென்ட் திவ்யா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) ---40 செகண்ட்*

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் மூன்று நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி சேவையை மாநில ஊரக தொழில்துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் இன்று தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை சார்பில் ஒருநாள் ஆன்மீக சுற்றுலா பேருந்து சேவையையும் அமைச்சர் இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திருமதி உமா இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வியாழக்கிழமை நடைபெறும் என ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டத்தில் நவராத்திரி பண்டிகையையொட்டி நடைபெறவுள்ள மாநில அளவிலான கண்காட்சியில் பங்கேற்க விரும்பும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இணையதளம் வாயிலாக பதிவு செய்து பயன்பெறலாம் என ஆட்சியர் திருமதி பூங்கொடி கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தூத்துக்குடியில் எய்ட்.ஸ் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

தென்காசி மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வனவிலங்குகள் விளைநிலங்களுக்குள் வருவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வனத்துறையை கேட்டுக் கொண்டுள்ளனர்.

[]<<<>>>[]

கர்நாடகாவிலிருந்து கண்டைனர் லாரியில் கடத்தி வரப்பட்ட பத்து டன் தடை செய்யப்பட்ட குட்கா போதைப்பொருளை சென்னையை அடுத்த பூவிருந்தவல்லி அருகே காவல்துறையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

டுவெண்டி – டுவெண்டி மகளிர் உலகக்கோப்பைக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Harmanpreet Kaur தலைமையிலான இந்த அணியின் துணை கேப்டனாக ஸ்மிருதி மந்தனா அறிவிக்கப்பட்டுள்ளார்.

இப்போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வரும் அக்டோபர் மாதம் மூன்றாம் தேதி தொடங்கி 20-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

துபாய் மற்றும் ஷார்ஜாவில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

குரூப்-ஏ பிரிவில் இந்தியாவுடன் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

**[]<<<>>>[]**

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரித்விக் சதிஷ்குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.